மீட்டர் தொலைவில் வல்லத்திலும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன என்பதை அவருக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். எனினும், இந்தக் கோரிக்கை நியாயமானது என்பதன் அடிப்படையில் அரசு, உயர்நிலைக் குழுவின் மூலம் இதைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *497*, திரு. சஞ்சய் ராமசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் *498*, திருமதி வி.ஜி. மணிமேகலை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

498—

அருப்புக்கோட்டை தொகுதியில் ஒன்றியங்களைப் பிரித்தல்.

35688*—திருமதி வி.ஜி. மணிமேகலை:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதியில் உள்ள திருச்சுழி மற்றும் நரிக்குடி ஆகிய இரண்டு ஒன்றியங்களை மூன்றாகப் பிரித்து புதிதாக ம. ரெட்டியபட்டி ஒன்றியமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இயலாது.

திருமதி. வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்). 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு', என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் அடிச்சுவற்றையொட்டி, இன்று குடிமக்களுக்கு எதைச் செய்தால் நன்மை பயக்கும் என்று எண்ணி தொலைநோக்குப் பார்வையோடு பல நல்ல திட்டங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்கும் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாத்தியக்கூறு இல்லை என்று கூறிவிட்டார்கள். இல்லை என்ற சொல்லிற்கே இடம் இல்லை என்று இன்றையதினம்

1995 ஏப்ரல் 28]

பொற்கால ஆட்சி நடத்திவரும் நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்திலே முடியாது என்ற சொல்லிற்கே இடம் இல்லை; (குறுக்கீடுகள்) முடியாத சட்டங்களை எல்லாம் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அமைதியாக இருக்கவும். (குறுக்கீடுகள்) ஆட்டோ சங்கர் என்கின்ற ஒரு கொடியவனைத் தூக்கிலே போட்ட செய்தி வந்து இருக்கிறது. அதற்காகச் சிலர் அனுதாபம் தெரிவித்து (குறுக்கீடுகள்) சில நடவடிக்கைகளில் இறங்கி இருப்பார்கள். (குறுக்கீடுகள்) திருமதி மணிமேகலை.

திருமதி வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொண்டே. . . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செய்தி வந்திருக்கிறது; அத்தகைய கொடியவர்களுக்கும் சிலர் இன்றைக்கு அனுதாபம் தெரிவித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்று நீங்கள் நினைத்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்). திருமதி வி.ஜி. மணிமேகலை.

திருமதி வி.ஜி.மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொண்டே மகேசன் சேவை என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் அடிச்சுவற்றையொட்டி இன்று குடிமக்களுக்கு எதைச் செய்தால் நன்மை பயக்கும் என்பதை எண்ணி, அதற்கு ஒரு தொலை நோக்குப் பார்வையோடு ஒரு செயல்வடிவம் கொடுத்துக் கொண்டிருக்கும் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியிலே பல நல்ல திட்டங்களை இயற்றி இருக்கிறார்கள். முடியாது என்ற சொல்லிற்கே இடம் இல்லை என்ற வகையிலே இன்றைக்கு எத்தனையோ பேர் 69 சதவீத இட ஒதுக்கீட்டை முடியாது என்று சொல்லி கிடப்பிலே போட்டு இருந்ததை எல்லாம் எடுத்து அமென்ட்மென்ட் செய்து நம்முடைய தமிழகத்திலே பொற்கால ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் இந்த வேளையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாத்தியக்கூறு இல்லை என்று கூறி இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலமாக நான் மீண்டும் அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக அருப்புக்கோட்டை தொகுதி பரப்பளவிலே மிகவும் பரந்து இருக்கின்றது. ஒவ்வொரு கிராமத்திற்கும் செல்ல வேண்டும் என்றால் கிட்டத்தட்ட . . . .

[*1995 ஏப்ரல் 28*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திருமதி வி.ஜி. மணிமேகலை: 20 அல்லது 30 கிலோ மீட்டர் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து அந்தச் சட்டத்திற்கு அமெண்ட்மெண்ட் கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 இந்திய அரசமைப்பு 73-வது திருத்தச் சட்டப்படி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1958, இன்றைக்கு மாற்றப்பட்டு, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டு, 1994 முதல் அமல்படுத்தப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையில் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகளின் அமைப்புகள் மாற்றி அமைக்கப்பட உள்ளன. சட்டத்திருத்தத்தின் காரணமாக இந்த உள்ளாட்சி அமைப்புகள், ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி அமைப்புகளும் மற்ற பேரூராட்சிகள் போன்றவை அமைக்கின்ற தன்மையும், பிரித்தல் மற்றும் தரம் உயர்த்துதல் போன்ற கருத்துக்களை தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகள் பொறுப்பு ஏற்கும்வரை தள்ளி வைக்கலாம் என்று ஆணையிடப்பட்டுள்ளது. எனவே 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் தேர்தல் நடைபெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகள் பொறுப்பேற்கும் வரை இதுபோன்ற கருத்துக்களில் நடவடிக்கை எடுக்க இயலாத நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி வி.ஜி. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது கருத்துரு ஏதும் இல்லை என்று கூறிவிட்டார்கள். இன்றையதினம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று அதிகாரிகள் பார்ப்பது என்பது மிகவும் இயலாத காரியமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த தேர்தல் முடிந்தபிறகாவது அந்தச் சட்டத்திற்கு அமெண்ட்மெண்ட் கொண்டுவருவதற்குண்டான அல்லது தேர்தல் வருவதற்கு முன்பாக சட்டத்திற்கு அமெண்ட்மெண்ட் கொண்டு வருவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. டி. எம் செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். உள்ளாட்சித் தேர்தல் சம்பந்தமாக பல்வேறு நடவடிக்கைகளை தற்போது அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. நிதிநிலை அறிக்கையிலேயும் அதற்கு முன்பாக ஆளுநர் அவர்களுடைய உரையிலேயும் தமிழக அரசு ஜூன் மாதத்தில் உள்ளாட்சித் தேர்தலை நடத்த இருக்கின்ற எண்ணத்தை தெளிவுபடுத்தி இருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்த அரசு ஆணைக்கு ஒரு திருத்தம் கொண்டு வந்தால் அந்தத் தேர்தல் நடத்துகிற ஒரு நிலைமை மாறக்கூடிய சூழ்நிலை உருவாகும். ஆகவே தற்போது இந்தக் கருத்துரு பரிசீலிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 499, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

499—

கள்ளிக்காட்டு மக்களுக்கு விட்டுமனைப்பட்டா வழங்குதல்

*22088—**செல்வி கோ. மல்லிகா:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி பேரூராட்சி, கள்ளிக்காட்டு காலனி மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிலம் கையக நடவடிக்கைகள் முற்றுப் பெற்றதும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.